# 5 17ம், 18ம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள்

நாகரிக வளர்ச்சியில் பல்வேறு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதனின் வாழ்க்கை ஊட்டம் பெற்றிருக்கும் விதத்தை வரலாற்றை ஆராயும் போது தெரிந்து கொள்ளலாம். 17ம், 18ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட புரட்சிகரமான நிகழ்வுகள், மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கி அவை உலக வரலாற்றின் முக்கியமான திருப்புமுனைகளாக அமைந்த விதத்தை ஆராய்ந்து பார்ப்பதே இவ்வலகைக் கற்பதன் நோக்கமாகும்.

அதற்கமைய இப்பாட அலகின் மூலம் ஆங்கிலப் புரட்சி, அமெரிக்க சுதந்திரப் போர், பிரான்சியப் புரட்சி, கைத்தொழிற் புரட்சி என்பவற்றில் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

## ஆங்கிலப் புரட்சி ~ கி.பி. 1688

எமது நாட்டை நிர்வகிக்கும் பிரதான மத்திய நிலையம் பாராளுமன்றமாகும். உலகில் பெரும்பாலான நாடுகள் பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டே தமது நாடுகளை நிர்வகித்து வருகின்றன.

இவ்வாறான பாராளுமன்ற ஆட்சி முறைமையை உலகிற்கு வழங்கியோர் பிரித்தானியர் ஆவர். எமது நாட்டிற்கும் பாராளுமன்ற ஆட்சி முறையை அறிமுகம் செய்தவர்களும் அவர்களேயாவர்.


இலங்கைப் பாராளுமன்றம்


இங்கிலாந்துப் பாராளுமன்றம்

கி.பி. 1688ல் இங்கிலாந்தில் இடம்பெற்ற புரட்சி உலக வரலாற்றின் முக்கிய கட்டமாக கருதப்படுவதற்கான காரணம், அப்புரட்சியின் மூலம் நாட்டுக்கு நிர்வாகம் சார்ந்த சகல அதிகாரங்களையும் மன்னரிடம் இருந்து பாராளுமன்றம் தமதாக்கி கொண்டமையாகும்.

பிரித்தானியப் பாராளுமன்றத்தின் தோற்றமும் அரசனின் அதிகாரங்களைப் பாராளுமன்றம் சுவீகரித்துக் கொள்ளும் செயற்பாடும் பல்லாண்டுகளாகப் படிப்படியாக இடம்பெற்று வந்ததொன்றாகும்.

அரசனுக்கு ஆலோசனை வழங்கிய ''மெக்னும் கொன்ஸிலியும்'' அல்லது மஹா சபை, இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் மூலவித்தாகும் என்பது பெரும்பான்மையானோரது அபிப்பிராயமாகும். அரசனிடம் இருந்து நிலத்தைப் பெற்றுக் கொண்ட பிரதம குத்தகைக்காரர்கள் இம் மகாசபையில் அங்கத்துவம் பெற்றனர். இவர்கள் சமூகத்தில் உயர் அந்தஸ்துப் பெற்று சலுகைகளை அனுபவிக்கும் பிராந்திய ஆட்சியாளர்களாவர். இவர்கள் பெரன்கள் (பிரபுக்கள்) எனும் பெயரால் அழைக்கப்பட்டனர்.

## பாராளுமன்றத்தின் ஆரம்பம்

மானிய முறையின் ஆலோசனைச் சபையில் இடம்பெற்ற பெரன்களிடம் இருந்து மட்டுமே அரசனுக்கு வரி வசூலிக்க முடிந்தது. எனினும், பெரன்கள் சிறு தொகையினரே இருந்தனர். இதனால் அரசனின் வருமானம் போதியளவானதாக இல்லாமையால் பணக்காரர்களாக இருந்த நைட்டுகளையும், இம்மகா சபைக்கு அழைப்பதற்குத் தீர்மானித்தனர். காலப்போக்கில் பிராந்தியங்களினதும் நகரங்களினதும் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர். விசேடமான சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறானவர்களைக் கொண்டு மகாசபை கூட்டப்பட்டது. பிற்காலத்தில் இதுவே பாராளுமன்றமாக வளர்ச்சி கண்டது.

இவ்வாறு ஆரம்பமான பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் இடையே அதிகாரத்தை அனுபவிக்கும் விடயத்தில் கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் ஏற்பட்டன. கி.பி.1688ல் ஏற்பட்ட புரட்சி, இவற்றிற்கு முடிவுகட்டி, சகல அதிகாரங்களையும் மன்னனிடமிருந்து பாராளுமன்றம் பறித்துக் கொள்வதில் முற்றுப் பெற்றது.

## 1688க்கு முற்பட்ட முக்கிய சம்பவங்கள்

ஆங்கிலேயர் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு பாராளுமன்ற ஆட்சி முறை ஒன்றை அடையப்பெற்ற முதல் சம்பவமாக கி.பி.1215இல் இடம்பெற்ற ‘‘மக்னா காட்டா’’ (மகா பட்டயம்) ஒப்பந்தத்தைக் குறிப்பிடலாம்.

**மக்னா காட்டா ஒப்பந்தம் என்றால் என்ன?**

- மக்னா என்பதன் பொருள் மகா என்பதாகும்
- காட்டா அல்லது சாட்டர் என்பது உரிமைப் பத்திரமாகும்.
- இதற்கேற்ப மக்னா காட்டா என்பது மகா பட்டயமாகும்.

இவ்வொப்பந்தத்தின் முக்கியமான விடயமாக “மகா சபையின் அனுமதியின்றி வரிவிதிக்கவோ நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு அமைவாக விசாரணை செய்யப்படாத பிரஜை ஒருவனைத் தண்டிக்கவோ மன்னனுக்கு அதிகாரம் இல்லை” என்ற வாசகம் மன்னனின் கையொப்பத்துடன் எழுத்தின் மூலம் வெளியிடப்பட்டமையைக் குறிப்பிடலாம்.


மக்னா காட்டா ஒப்பந்தம்

மகாபட்டயம் இங்கிலாந்து அரசனின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் முதலாவது வரலாற்று ஆவணமாகவும், பாராளுமன்ற அதிகாரம் வளர்ச்சி பெறுவது சம்பந்தமான முக்கியமான நிகழ்வாகவும் அமையப் பெற்றது. இதில் கி.பி. 1215இல் பிடிவாத குணமுள்ள பலவீனமான அரசன் 1 ஆம் ஜோன், பிரபுக்களின் வற்புறுத் தலால் கையொப்பமிட்டான்.

அரசனால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் சட்டமாகக் கருதப்படும் காலத்தில், இவ்வொப்பந்தத்தில் அரசன் கையெழுத்திட்டதன் மூலம் அவனும் சட்டத்திற்குக் கட்டுப்படும் நிலைமை உருவானது.

**இவ்வொப்பந்தத்தின் படி மன்னன்**

* புதிய வரி ஒன்றை விதிப்பதற்கும்.
* தமது விருப்பப்படி நிதியைக் கையாளுவதற்கும்
* புதிய சட்டம் ஒன்றைத் இயற்றுவதற்கும் நடைமுறையிலுள்ள சட்டம் ஒன்றை திருத்துவதற்கும்

மகாசபையின் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது.

மகாசபையே பிற்காலத்தில் பிரபுக்கள் சபை, பிரதிநிதிகள் சபை எனும் பெயர்களுடன் இன்றைய பாராளுமன்றமாக வளர்ச்சியுற்றது. பாராளுமன்றத்தின் இரு சபைகளுள் பிரபுக்கள் சபையில் பிரபுக்களும் பிரதிநிதிகள் சபையில் மக்கள் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர்.

பாராளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் மன்னனிடமே காணப்பட்டது. எனவே, தான் விரும்பும்போதே மன்னன் அதனைக் கூட்டினான்.

பாராளுமன்றத்தின் அதிகாரம் மேலும் ஒருபடி வளர்ச்சி அடைந்தது எட்டாவது ஹென்றி மன்னனின் காலத்திலாகும் (1519 - 1547). இவனது கால கட்டத்தில் ஐரோப்பாவில் சமய சீர்திருத்த இயக்கம் ஏற்பட்ட வேளையில் பாப்பாண்டவரின் ஆதிக்கத்திலிருந்து மீளத் தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்வதற்கு பாராளுமன்றத்தின் உதவியைப் பயன்படுத்தினான். இதனால் பாராளுமன்றம் மேலும் மேலும் முக்கியத்துவம் அடைந்தது.

கி.பி. 1603ம் ஆண்டில் ஸ்டுவட் எனும் அரச வம்சம் இங்கிலாந்தின் ஆட்சி பீடத்தில் அமர்ந்ததுடன் நிலைமை மாறத் தொடங்கியது. முதலாம் சாள்ஸ் மன்னன் (1625-1649) பாராளுமன்றத்தைப் புறந்தள்ளிவிட்டு சட்டங்களையும் வரிகளையும் விதிக்க முனைந்தான். இதனைப் பாராளுமன்றம் எதிர்க்கவே மன்னன் அதனைக் கலைத்து விட்டான்.


முதலாம் சாள்ஸ் மன்னன்

அரசனின் இச்செயற்பாட்டை எதிர்த்த ஒலிவர் குறொம்வெல்லின் தலைமையில் பாராளுமன்றத்திற்கும், மன்னனுக்குமிடையே போர் ஏற்பட்டு, அதன் இறுதி முடிவாக தேசத்துரோகியாக மன்னன் மீது குற்றம் சாட்டப்பட்டு அவன் சிரச்சேதம் செய்யப்பட்டான்.

1ஆம் சாள்ஸ் மன்னனின் மரணத்தின் பின்னர் குரொம்வெல் பொதுநல அரசு பெயருடன் அடுத்த 11 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்தான். என்றாலும் பொதுநல அரசு என்ற பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்ததனால் குரோம்வெல்லின் மரணத்தின் பின் பெரும்பான்மையோரின் விருப்பத்தின் பேரில் மீளவும் முடியாட்சி முறை ஏற்படுத்தப்பட்டது.



ஒலிவர் குரொம்வெல்

தீவிர கத்தோலிக்க பக்தனான 2ஆம் ஜேம்ஸ் மன்னன் பதவியேற்றதுடன் (1685-1688) மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் மீண்டும் மோதல் ஏற்பட்டது. இம்மோதலுக்கு சமயக் கருத்து வேறுபாடே காரணமாக அமைந்தது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினர் சீர்த்திருத்த சமயத்தவராயிருக்க மன்னனோ றோமன் கத்தோலிக்கனாயிருந்தான். மன்னனுக்குத் தேவைப்பட்டதோ அரசுரிமையை றோமன் கத்தோலிக்க சமயத்தவனுக்கு வழங்குவது ஆகும். என்றாலும் பாராளுமன்றம் மன்னனின் மகளைத் திருமணம் செய்திருந்த சீர்திருத்த சமயத்தவரான நெதர்லாந்தைச் சேர்ந்த இளவரசர் வில்லியத்திற்கு முடிசூட விரும்பியது. இளவரச தம்பதியைப் பதவியேற்க பாராளுமன்றம் அழைப்பு விடுத்தது. அவ்விருவரும் அழைப்பை ஏற்று இங்கிலாந்திற்கு வந்திறங்கிய போது,



ஒலிவர் குரொம் வெல் - 1ம் சாள்ஸ் போரின் போது தீப்பிடித்த லண்டன் நகரச் சித்திரம்



2 ஆம் ஜேம்ஸ் மன்னன்

இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் பிரான்சிற்குத் தப்பி ஓடினான். வெற்றி பெற்ற பாராளுமன்றம் மூன்றாம் வில்லியத்தையும் இரண்டாம் மேரியையும் பிரித்தானிய சிம்மாசனத்தில் அமர்த்தியது. இவர்கள் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட உரிமைகள் மனுவை ஏற்றுக்கொண்டே பதவியில்

அமர்ந்தமையால் பாராளுமன்றத்துக் கட்டுப்பட்ட மன்னராட்சி இங்கிலாந்தில் உருவானது.

## புரட்சியின் பலாபலன்கள்

1688 ஆங்கில புரட்சியின் முக்கிய விளைவாக அமைந்தது. 1689 இல் வெளியிடப்பட்ட ''உரிமைகள் மனு'' ஆகும்.

மக்னா காட்டா ஒப்பந்தத்துடன் ஆரம்பமான பாராளுமன்ற ஆதிக்கம் கி.பி 1689ல் நிறைவேற்றப்பட்ட உரிமைகள் மனுவின் மூலம் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டன.

அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு :

1. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் வரி விதித்தல் ஆகாது.
2. மன்னனுக்கு நிரந்தரப் போர்ப் படை ஒன்று தேவையெனில் அதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.
3. பாராளுமன்றத்தின் பேச்சு, விவாதம், முடிவெடுக்கும் உரிமைகளில் மன்னன் தலையிடக் கூடாது.
4. கொடூரமான மனிதத்தன்மையற்ற தண்டனைகள் வழங்கப்படக் கூடாது
5. இங்கிலாந்தின் ஆட்சியுரிமை புரட்டஸ்தாந்து சமயத்தினருக்கு மட்டுமே உரித்துடையது. உரோமன் - கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த எவருக்கும் அல்லது அவர்களுடன் திருமண உறவு வைத்துக்கொண்ட எவருக்கும் சிம்மாசன உரிமை இல்லை

- நீண்ட காலமாக மன்னனிடமிருந்த அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் வசமானமையால் பொது மக்களின் பிரதிநிதிகளாலான அத்தாபனத்திடம் இங்கிலாந்தின் ஆட்சி நடவடிக்கைகள் சென்றடைந்தன. இப்புரட்சி **இரத்தம் சிந்தாப் புரட்சியென்றும் மாண்புமிகு புரட்சி என்றும் குறிப்பிடப்படுகிறது.**

- இப்பாராளுமன்றம் ஜனநாயகத்தை நோக்கி நெருங்கிச் செல்லும் அளவிற்கு வளர்ச்சியடைந்தது.
  உ+ம் : பிற்காலத்தில் வாக்குரிமை, அரசியல் கட்சிகளின் தோற்றம், பிரதமரும் அமைச்சரவையும் உருவாதல்.

- இங்கிலாந்தின் பாராளுமன்ற முறையையே உலகிலுள்ள அனேகமான ஜனநாயக நாடுகள் பின்பற்றுகின்றமை.
  உதாரணமாக : இலங்கை, இந்தியா

- அமெரிக்க சுதந்திரத்திற்கு முன்னுதாரணமாக அமைந்தமை.
  உ+ம் :''பிரதிநிதித்துவமின்றேல் வரியுமில்லை'' என்ற கோஷம் உரிமைகள் மனுவின் வாசகத்திலிருந்தே பெறப்பட்டது.

**செயற்பாடு**

1. மக்னா காட்டா ஒப்பந்தத்தின் மூலம் மகா சபைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் மூன்றைக் குறிக்குக.
2. பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் வழங்கப்பட்ட பெயர்களைக் குறிப்பிடுக.
3. 1689 ஒப்பந்தத்தின் படி பாராளுமன்றம் பெற்றுக் கொண்ட உரிமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
4. ஆங்கிலப் புரட்சியின் விளைவுகள் யாவை?

## அமெரிக்க சுதந்திரப் போர்

15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட நாடுகாண் பயணங்களின் விளைவாக அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்காவைக் கண்டுபிடித்த பின்னர் ஸ்பானியர், போர்த்துக்கேயர், பிரான்சியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் அங்கு குடியேற்றங்களை அமைத்தனர்.

**ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்ததன் நோக்கங்கள்.**

- சிறந்ததொரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்வதற்கான செல்வம், நிலம், சுதந்திரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல்.
- சமய பிரசாரங்களுக்காகவும் சமய சுதந்திரத்திற்காகவும், மதச்சீர்திருத்த இயக்கங்களினால் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு சமயப் பிரிவினரும் தத்தமது சமய சீர்த்திருத்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்காகவும் றோமன் கத்தோலிக்கத்திற்கும் சீர்திருத்த இயக்கங்களுக்கும் இடையே இடம் பெற்ற மோதல்களால் பாதிப்புற்ற மக்கள் சமய சுதந்திரத்துடன் வாழ்வதற்காகவும் செல்லல்.
- புகழ்பெறுவதில் நாட்டம் : புதிய பிரதேசங்களைக் கண்டறிதலால் தமக்கும் தமது நாட்டிற்கும் புகழ் சேர்த்தல்.

## ஐரோப்பியர் குடியேற்றங்களை அமைத்தல்

ஐரோப்பியர் வரும்போது அமெரிக்காவில் வாழ்ந்த ஆதிக்குடியினரே செவ்விந்தியர்களாவர். இவர்களின் ஆட்சியையும் கலாசாரத்தையும் அழித் தொழித்துவிட்டே ஐரோப்பியர் அவ்விடங்களில் தமது குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்.


இவ்வாறு இவர்கள் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே குடியேற்றங்களை அமைப்பதில் ஈடுபட ஆரம்பித்தனர்.



செவ்விந்தியர்

ஸ்பானிய, போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரான்சிய, ஆங்கிலேய இனத்தவர்களால் அமெரிக்காவில் குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட போதிலும் வட அமெரிக்காவில் நிலையான குடியேற்றங்களை உருவாக்குவதில் பெருமளவுக்கு வெற்றி பெற்றவர்கள் ஆங்கிலேயர்களேயாவர். 1776 இல் சுதந்திரப் போர் ஆரம்பமாகும்போது ஆங்கிலேயக் குடியேற்றங்கள் பதின்மூன்று வடஅமெரிக்காவில் காணப்பட்டன.

அவையாவன:
வேர்ஜினியா, ஜோர்ஜியா, பென்சில்வேனியா, நியுயோர்க், நியுஜேர்சி, டெலவெயார், மஸ்ஸூசெட்ஸ், கெனக்டிகட், தென் கரோலினா, வட கரோலினா, நியுஹேம்ஷயர், மஸ்ஸிசெட்ஸ், ரோட்ஜலண்ட், மேரிலண்ட்.




வட அமரிக்காவின் ஆரம்ப ஆங்கிலக் குடியேற்றங்கள்

இந்த அமெரிக்கக் குடியேற்றங்களின் பிரஜைகள் தாய்நாடான பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு மேற்கொண்ட போராட்டமே அமெரிக்கச் சுதந்திரப் போர் எனப்படுகிறது.

இச்சுதந்திரப் போர் உலக வரலாற்றிலே முக்கியத்துவமான நிகழ்வாகக் கருதப்படுவதற்கான காரணங்களாவன:

- ✸ பலம் வாய்ந்த பிரித்தானிய பேரரசுக்கு விரோதமாக குடியேற்ற வாசிகள் புரிந்த முதலாவது சுதந்திரப் போராக இருந்தமை.
- ✸ சுதந்திரத்தைப் பெற்ற பின்னர் குடியேற்ற வாசிகள் உருவாக்கிய அரசியல் யாப்பே உலகில் எழுதப்பட்ட முதலாவது யாப்பாக அமைந்தமை.

## சுதந்திரப் போருக்கான பின்னணி

வடஅமெரிக்காவில் உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள், பிரித்தானிய முடியால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தது. நிர்வாகம் சார்ந்த விடயங்களில் அமெரிக்கர்களுக்குப் போதிய சுதந்திரம் காணப்பட்டது.


புகையிலைப் பண்ணை

எனினும் பொருளாதார விடயங்களில் இவ்வாறானதொரு சுதந்திரம் அவர்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை. உலகம் பூராவும் குடியேற்றங்களைக் கொண்டிருந்த பிரித்தானியரது பிரதான நோக்கம் இவற்றிலிருந்து இயன்றளவு இலாபத்தை உழைத்துக் கொள்வதாகும். இப்பதின்மூன்று குடியேற்றங்களும் பிரித்தானியப் பிரஜைகளைக் கொண்டிருந்த போதிலும் ஆங்கிலேயர்கள் இவர்கள் மீது இலாபம் உழைக்கும் கொள்கையையே நடைமுறைப்படுத்தினர்.

இக்காலத்தில் ஐரோப்பாவில் கைத்தொழிலில் பெருமுன்னேற்றம் காணப்பட்டது. ஆனால் அமெரிக்கா கைத்தொழிலில் முன்னேறுவதை, பிரித்தானியா விரும்பவில்லை. தமது கைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முடிவுப் பொருட்களை விற்பதற்குமான ஒரு சந்தையாகவே அமெரிக்காவை அவர்கள் பாவித்தனர்.


உதாரணமாக பிரித்தானியாவின் புடைவைக் கைத்தொழிலுக்குத் தேவையான பருத்திப் பஞ்சையும், சிகரெட் தொழிற்சாலைக்குத் தேவையான புகையிலையையும் பயிரிட்டது அமெரிக்காவில் பயிரிடப்பட்டது என்றாலும் அவற்றிற்கான தொழிற்சாலைகளை அமெரிக்காவில் அமைப்பது தடுக்கப்பட்டிருந்தமையைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு பிரித்தானியப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களால், தமது வர்த்தக நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுவது குடியேற்றவாசிகளின் வெறுப்புக்குக் காரணமாயமைந்தது.

குடியேற்ற வாசிகள் தமது தாய்நாட்டுடன் மனஸ்தாபப்படுவதற்கு இன்னுமொரு காரணமாக அமைந்தது, தம்மீது பல்வேறு வரிகளை விதித்தமையேயாகும்.


இக்கால கட்டத்தில் இங்கிலாந்திற்கும் பிரான்ஸிற்கும் இடையே குடியேற்றங்களில் இடம்பெற்ற போரிற்கான செலவுகளை ஈடுகட்டுவதற்காகவே, தாய் நாட்டால் புதிய வரிகள் விதிக்கப்பட்டன. தவிர 1765ஆம் ஆண்டு மேலும் புதிய வரிகள் விதிக்கப்பட்டன. தேயிலை வரி, கண்ணாடி வரி, கடதாசி வரி, முத்திரை வரி என்பன அவற்றுள் சிலவாகும்.

இதனால் பதிவுகள், பத்திரிகைகள், சட்டரீதியான ஆவணங்கள் போன்றவற்றுக்குப் பெருந்தொகைப் பணத்தை வரியாகச் செலுத்த வேண்டியேற்றபட்டது.



முத்திரைகள்


குடியேற்ற வாசிகள் இவ்வரிக்குத் தமது பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தனர். கி.பி 1688ஆம் ஆண்டுப் புரட்சியின் போது, பிரதிநிதிகளின் அனுமதியின்றி வரிவிதிக்கக் கூடாது எனும் வாசகம் உரிமை மனுவில் இடம் பெற்றிருக்கையில், எமது பிரதிநிதிகள் இடம்பெறாத, பிரித்தானியப் பாரளுமன்றத்தால் எம்மீது எவ்வாறு வரிவிதிக்க முடியும் எனக் குடியேற்ற வாசிகள் கேள்வி எழுப்பினர். இக்கோரிக்கைக்கு செவிசாய்க்கப்படாமையால், **''பிரதிநிதித்துவமின்றேல் வரியுமில்லை''** என்ற கோஷத்துடன் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.



வரிவசூலிக்க வந்த அதிகாரிகளைக் குடியேற்ற வாசிகள் தாக்குதல்

இதன் பிரதிபலனாக தேயிலை வரி தவிர்ந்த ஏனைய வரிகள் அகற்றப்பட்டன. என்றாலும் தமது குடியேற்றங்கள் மீது, தமக்கு வரிவிதிக்கும் அதிகாரம் உண்டு என்ற நிலைப்பாட்டில் பிரித்தானியா உறுதியாக இருந்தது. இதனடிப்படையில் அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை வரியை பிரித்தானியா நீக்கவில்லை.

குடியேற்ற வாசிகளிடமிருந்து எவ்வித வரியையும் அறவிடப் பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு உரிமையில்லை எனக்கூறிய குடியேற்றவாசிகள் முற்றிலும் பிரித்தானியா ஆட்சியிலிருந்து விடுதலை பெறும் பொருட்டுப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.



பொஸ்டன் தேனீர் விருந்து




பொஸ்டன் துறைமுகத்தின் இன்றைய தோற்றம்

1773ஆம் ஆண்டளவில் இப்போராட்டம் தீவிரமடைந்தது. அப்போது வட அமெரிக்காவில் இருந்த பொஸ்டன் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தேயிலை ஏற்றப்பட்ட கப்பல்களில் நுழைந்த போராளிகள், அங்கிருந்த தேயிலைப் பெட்டிகளைத் தூக்கிக் கடலில் எறிந்தனர். ''பொஸ்டன் தேநீர் விருந்து'' என அழைக்கப்படும் இச்சம்பவமே, சுதந்திரப் போரின் ஆரம்பமாக அமைந்தது.

இரு தரப்பினரும் போராடிக் கொண்டிருக்கும் போது கி.பி 1776ல் போராளிகளின் பிலடெல்பியா நகரில் ஒன்று கூடினர்.

## பிலடெல்பியாத் தீர்மானத்தில் காணப்பட்ட முக்கிய வாசகங்கள்

1. பிரித்தானியப் பொருட்களைப் புறக்கணித்தல்.
2. குடியேற்ற வாசிகளின் உரிமைகள் தொடர்பான அறிக்கை ஒன்றை நிறைவேற்றிக் கொள்ளல்.
3. பிரித்தானியாவுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதற்காக ஜோர்ஜ் வொஷிங்டனைத் தலைவராக நியமித்துக் கொள்ளல்.



பில்டெல்பியா சம்மேளனம்


## சுதந்திரமும் புதிய அரசியல் யாப்பும்

1776ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் திகதி குடியேற்றவாசிகள் பிரித்தானியா ஆதிக்கத்திற்கு எதிராக சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டனர். அதனைக் கடுமையாக எதிர்த்த பிரித்தானியா குடியேற்ற வாசிகளுக்கான நிலைப்பாட்டை மேலும் கடுமையாக்கியது. ஜோர்ஜ் வாஷிங்டனின் கீழ் திடமனதுடன் போராடிய குடியேற்ற வாசிகள் சுதந்திர அமெரிக்காவிற்கான அரசியல் யாப்பை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நீண்ட கால யுத்தத்தின் பின்னர் 1783 ஆம் ஆண்டில் பிரான்ஸின் வேர்செயில்ஸ் மாளிகையில் பிரித்தானியா - அமெரிக்க நாடுகளுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் ஐக்கிய அமெரிக்கா சுதந்திரமடைந்தது.

இப்புதிய நாடு 1787இல் தனக்கென அரசியல் யாப்பு ஒன்றை எழுதிக் கொண்டது. இதுவே உலகில் எழுதப்பட்ட முதலாவது அரசியல் யாப்பு என்ற பெருமையைப் பெறுகிறது. மனித அடிப்படை உரிமைகள் இதில் சேர்க்கப்பட்டமையால் உலகளாவிய மதிப்பைப் பெற்றுக் கொண்டது.

அமெரிக்கக் குடியேற்ற வாசிகளின் சுதந்திரம் பிரித்தானியரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் மூலம் ஐக்கிய அமெரிக்கக் குடியேற்றங்கள் உதயமாயின. அதன் பின்னர் அமைக்கப்பட்ட அமெரிக்க அரசியல் யாப்பிற்கு அமைய தேர்தல் நடைபெற்று ஜோர்ஜ் வாஷிங்டன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.


IN CONGRESS, JULY 4. 1776

The unanimous Declaration of the ... States of America

அமெரிக்க சுதந்திர பிரகடனம்

ஐக்கிய அமெரிக்கா இவ்வாறு தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக மேற்கொண்ட போராட்டமும் மனித உரிமைகள் பிரகடனமும் ஐரோப்பாவில் ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாக அமைந்தன. பிரான்சியப் புரட்சியிலும் இதன் செல்வாக்கைக் காணக்கூடியதாக உள்ளது.

சுதந்திரமடைந்த ஐக்கிய அமெரிக்கா துரிதமாக கைத்தொழில் துறையில் முன்னேறி தனது எல்லைகளைப் படிப்படியாக விஸ்தரித்து இன்று உலகின் தலையாய வல்லரசாகத் திகழ்கிறது.

**செயற்பாடு**

1. கீறிட்ட இடங்களை நிரப்புக.

(அ) 13 குடியேற்றங்களுடன் ஆரம்பமான ஐக்கிய அமெரிக்காவில் இன்று ........................................ மாநிலங்களுள்ளன.

(ஆ) இன்றைய ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியாக .................................. கடமையாற்றுகிறார்.

(இ) அமெரிக்காவில் முதல் கால் பதித்த நாடுகாண் பயணி ................... ஆவார்.

(ஈ) சந்திரனில் இறங்கிய முதல் மனிதனான .................................... ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

(உ) ''மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மக்களாட்சியே ஜனநாயகம்'' என அமெரிக்காவின் புகழ் பெற்ற ஜனாதிபதி ...................... குறிப்பிட்டார்.

2. ஐக்கிய அமெரிக்காவின் உதயம் உலக நாடுகளுக்குவழங்கியுள்ள முன்மாதிரிகள் யாவை?

3. கீழ்வரும் விடயங்களைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

   1. பொஸ்டன் தேநீர் விருந்து
   2. ஜோர்ஜ் வொஷிங்டன்
   3. அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்
   4. கூட்டாட்சி (சமஷ்டி) முறை

4. உலகப்படம் ஒன்றில் இன்றைய ஐக்கிய அமெரிக்காவை நிழற்றிக் காண்பிக்க.

# பிரான்சியப் புரட்சி

**சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** எனும் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பிரான்சில் இடம்பெற்ற மாபெரும் மாற்றமே பிரான்சியப் புரட்சியாகும். இது மனித உரிமைகளைக் காத்துத் தந்த சம்பவமாக அறிமுகம் செய்யத்தக்கது. அது அடிப்படை மனித உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றப் பயணத்தில் இன்னுமொரு முக்கிய கட்டமாகும்.

கி.பி 1789ல் பிரான்ஸை ஆண்டு கொண்டிருந்த பதினாறாம் லூயி மன்னனின் ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அரசியல், சமூக மாற்றமே **பிரான்சியப்** புரட்சி எனக் குறிப்பிடப்படுகிறது.

## புரட்சிக்கான காரணங்கள்

இப்புரட்சியானது ஒரே முறையில் மூண்டதொன்றல்ல அதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஆண்ட 14ம் லூயி 15ம் லூயி மன்னர்களின் காலத்திலிருந்தே விருத்தியடைந்து வந்த ஒன்றாகும்.

புரட்சிக்கு முன்னர் பிரான்ஸில் மானிய முறை சமூக அமைப்பே நிலவிவந்தது. அதில் அரசனை முதன்மையாகக் கொண்டு பிரபுக்கள், குருமார்களுடன் பொது மக்களுமாக மூன்று சமூகத் தரங்கள் காணப்பட்டன. இப் பிரிவினர் அனைவரும் பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்குக் காரணமாயினர்.

## மன்னரின் எல்லையற்ற அதிகாரங்கள்

இக்காலத்தில் பிரான்சில் மன்னராட்சி முறையே நிலவி வந்தது. அரசாட்சி ஆண்டவனால் தமக்களிக்கப்பட்ட வரமாகக் கருதப்பட்டு சட்டம் இயற்றுதல், அதனை அமுல் நடத்துதல், இறுதியாக நீதி வழங்கல் எனும் எல்லா அதிகாரங்களும் மன்னனை மையமாகக் கொண்டே அமைந்திருந்தன. மன்னர்கள் தமது பதவியால் எந்தளவு தலைவீக்கம் அடைந்திருந்தார்கள் என்றால், **"நானே அரசு"** என்று 14ம் லூயி குறிப்பிட்டதிலிருந்து இதனை விளங்கிக் கொள்ளலாம். அவன் தான் மேற்கொள்ளும் எந்தவொரு விடயமும் சட்ட ரீதியானது எனக் குறிப்பிட்டான். எந்தவொரு குற்றச்சாட்டோ, நீதிவிசாரணையோ இன்றி விரும்பியவர்களைக் கைது செய்து ஆயுள் முழுதும் சிறையில் அடைக்கும் அதிகாரம் அரசனுக்கிருந்தது. பிரான்சிய மன்னர்கள் இவ்வதிகாரத்தைத் தனது தனிப்பட்ட அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்குப் பயன்படுத்தியதோடு, அவ்வாறானவர்கள் பஸ்டீல் கோட்டைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

அரசன் சர்வாதிகாரியாகவும், சுகபோக வாழ்க்கையை மேற்கொள்பவனாகவும் இருந்தான். அரசன் வாழ்ந்த வேர்செயில்ஸ் மாளிகை மிகவும் ஆடம்பரமானதாக இருந்தது. பிரபுக்களும் குருமாரும் மட்டுமே இதில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டிருந்தமையால் மன்னன் - மக்கள் உறவு பலவீனப்பட்டுப் போயிருந்தது.



வேர்செயில்ஸ் மாளிகை

அரசன் எதேச்சதிகாரியாக நடப்பதைத் தடுக்க முடியாதிருந்தமைக்கான காரணம், சாதாரணப் பொது மக்கள் தமது வேதனைகளைச் சொல்வதற்கு சந்தர்ப்பமோ நபரோ கிடையாதிருந்தமையாகும்.

பிரான்சிய ஆட்சிச் சபையான ஸ்டேட் ஜெனரல் 175 வருடங்களாகக் கூட்டப்படவே இல்லை. இதனால் தமது துன்ப துயரங்களை முன்வைக்கவும் ஓரிடம் இருக்கவில்லை. ஆகையால் மக்களின் கஷ்ட நஷ்டங்கள் மன்னனை எட்டவுமில்லை.



14ம் லூயி

14ம் லூயி மன்னனின் காலத்தில் இருந்தே பிரான்சியப் புரட்சிக்கான பின்னணி உருவாகி வந்ததாக முன்னே குறிப்பிட்டுள்ளோம். இம்மன்னன் சர்வாதிகாரியாக இருந்தாலும் ஆற்றல் மிக்க மன்னனாகக் காணப்பட்டான். ஆனால் புரட்சியின் போது மன்னனாக இருந்த 16ம் லூயி சலன புத்தி படைத்தவனாகவும், மோசமான நிர்வாகியாகவும் காணப்பட்டான். அரசனைச் சூழ்ந்திருந்த வரையறையற்ற அதிகாரமும், திறமையின்மையும் படுமோசமான நிர்வாகத்தை உருவாக்கியது.

இம்மன்னனது மனைவியான மேரி அன்டோயினட் அரசி பெருமிதம் பிடித்த வெளிநாட்டுப் பெண்ணாக இருந்ததோடு அரச நிர்வாகத்திலும் தலையீடு செய்து வந்தாள். சாதாரண மக்கள் பசிக்குப் பாண் கேட்டுப் போராடிய போது **''பாண் இல்லையேல் கேக் சாப்பிடுங்கள்''** என்று குறிப்பிட்டற்கு அம்மக்களைப்பற்றி அவள் அறிந்திராமையே காரணமாகும்.

இவ்வாறு மன்னனுக்கும் மக்களுக்கும் தொடர்பில்லாமல் இருந்தமை, பொதுமக்களை மனக்குழப்பமடையச் செய்து அது புரட்சி ஒன்று உருவாவதற்கு வழிவகுத்தது. மன்னனின் அதீத அதிகாரத்தின் காரணமாக அவனை விமர்சிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இவ்வாறாக அரச எதிர்ப்பு, புரட்சி ஒன்றாக வடிவம் பெற்றது.


மேரி அன்டோயினட்டும் அவரது பிள்ளைகளும்


16ம் லூயி

## பிரபுக்களின் அதிகாரம்

அக்காலப் பிரான்ஸிய சமூகத்தில் பிரபுக்களாகக் கருதப்பட்டவர்கள் நிலச் சுவாந்தர்களும், குருமாரும் ஆவர். அவர்கள் பிரான்சிய மக்கள் தொகையில் 4% மட்டுமே. பிரான்ஸின் நிலத்தின் பெரும்பகுதி இப்பிரபுக்கள் வசமே இருந்தது. 13ம், 14ம் லூயி மன்னர்களின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்த்திருத்தங்களால் அரசியல், நீதி, போர் சார்ந்த அதிகாரங்களில் பெரும்பாலானவை மத்திய அரசால் பறிக்கப்பட்டிருந்தது. இதனால் பிரபுக்கள் பிராந்திய நிர்வாக அதிகாரங்களை இழந்திருந்தனர். அவ்வதிகாரங்களைச் செயற்படுத்த அரசனால் **இன்டென்டன்ட்ஸ் (Intendants)** எனும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். என்றாலும் பிரபுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த சமூக அந்தஸ்தும் சலுகைகளும் அவர்களிடமிருந்து அகற்றப்படவில்லை. ஆகையால் எச்சேவையையும் புரியாமல் சலுகைகளை மட்டும் அனுபவித்துக் கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த பிரபுக்களும் சாதாரண மக்களின் வெறுப்புக்கு ஆளாகினர். ஆனால் பிரபுக்களோ தாம் இழந்த அதிகாரங்களை மீளப் பெறுவதற்கான வழிவகைகளைத் தேடிக்கொண்டிருந்தனர்.

பிரபுக்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த குருமார்கள் நிலச் சொந்தக்காரராகவும், சொத்துடையோராகவும் வாழ்ந்ததோடு, சலுகைகளையும் அனுபவித்து வந்தனர்.

**பிரபுக்கள் அனுபவித்த சலுகைகள் சில**

- ✷ நாட்டில் விரும்பிய இடத்தில் வேட்டையாடவும் மீன்பிடிக்கவும் உரிமையுடையோர்.
- ✷ பிரபுக்களின் ஆலைகளிலும் போறணைகளிலும் (வெதுப்பகங்களிலும்) பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவு செய்யும் போது கூடிய வாடகை வசூலித்தல்.
- ✷ விவசாயிகளின் நிலத்தில் வரி அறவிடும் அதிகாரம்
- ✷ அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய சில வரிகளிலிருந்து விடுதலை.

## பொதுமக்களின் நிலை

பிரான்ஸில் விவசாயிகளும் கிராமிய நகர தொழிலாளர்களும் மத்திய வர்க்கத்தினரும் சாதாரண மக்களாகக் கருதப்பட்டனர்.

இவர்களுள் பிரான்சிய சனத்தொகையில் 92 வீதத்தினர் தொழிலாளரும் விவசாயிகளும் ஆவர். என்றாலும் இச்சமூக அமைப்பில் மிகவும் துன்புற்ற வர்க்கத்தினர் இவர்களேயாவர். இவர்கள் அரசாங்கத்திற்கும், தேவாலயத்திற்கும், பிரபுக்களுக்கும் பல்வேறு வரிகளைச் செலுத்த வேண்டியவர்களாய் இருந்தனர்.

**பொதுமக்களைத் துன்பத்துக்குள்ளாக்கிய வரிகளில் சில**

- ✷ வருடாந்த நிலவரி (பொருளாகவோ பணமாகவோ)
- ✷ 10 அல்லது 15 வருடங்களுக்கு செலுத்த வேண்டிய வரிகள்.
- ✷ உற்பத்தியில் 10% தேவாலயத்திற்குச் செலுத்த வேண்டிய ''டயித்'' எனும் வரி.
- ✷ உப்பு வரி : வருடாந்தம் ஒவ்வொருவரும் ஏழு இறாத்தல் உப்பை விலை கொடுத்து வாங்கியாக வேண்டும்.

இவற்றுக்கு மேலாக வெவ்வேறு வகையான அரச வரிகளும், ஆலயத்திற்குச் செலுத்த வேண்டிய பணமும் இருந்தன. இதற்கமைய விவசாயிகளின் வருமானத்தில் 60% வரை வரிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டி இருந்தது. பிரபுக்களிடமிருந்தும் குருமாரிடமிருந்தும் வரி அறவீடு செய்யப்படவில்லை.

## பிரான்சில் மத்தியதரவர்க்கத்தினரின் எழுச்சி

பிரான்சில் வியாபார, கைத்தொழில் முன்னேற்றத்தால் உருவான மத்தியதர வர்க்கத்தினர் வேகமாக அதிகரித்தனர். முயற்சியாளர்கள், எழுத்தாளர்கள் சிந்தனையாளர்கள், தத்துவவாதிகள், சட்டவியலாளர்கள், கற்றோர் ஆகியோர் மத்திய தரத்தினராவர். அவர்களிடம் பணமும் அறிவும் உயர் மட்டத்திலிருந்தாலும் இவர்களுக்கு சமூக அந்தஸ்தோ, அரச பதவிகளோ வழங்கப்படவில்லை. என்றாலும் கற்காத செயற்றிறனற்ற பிரபுக்களுக்கு இவையனைத்தும் வாய்க்கப் பெற்றமையால் இச்சமூக முறையை அவர்கள் எதிர்த்தனர். ஒருவருடைய நிலையை மதிப்பீடு செய்ய வேண்டியது அவருடைய பிறப்பை வைத்தல்ல. ஆற்றலையும் பணத்தையும் வைத்தே ஆகும் என்ற கருத்து வலுப்பெற்றது இதனை வைத்தே ஆகும். இதற்கமைய பிரான்சியப் புரட்சியின் முக்கிய சுலோகமாக **"சமத்துவம்"** எனும் சொல் அமைந்தது. இது பிரான்சியப் புரட்சியின் முக்கிய சுலோகமாக மாறியது.

பிரான்சில் நிலவிய சிக்கலான உள்ளூராட்சி முறை மத்திய வகுப்பாரின் செயற்பாடுகளுக்கு இடைஞ்சலாக இருந்தது. மானிய முறை அமைப்பில் நிர்வாகம் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டது. இவற்றிடையே 360 வகையான சட்டங்கள் காணப்பட்டன. அத்தோடு ஒவ்வொரு பிரதேச எல்லையிலும் வரி செலுத்தவும் நேர்ந்தது. தென் பிரான்சிலிருந்து தலைநகரான பாரிஸிற்கு பொருட்களைக் கொண்டு வருகையில் 40 இடங்களில் வரி செலுத்த வேண்டி இருந்ததோடு இதற்கான பிரயாணக் காலம் இரு வாரங்களாயிருந்தன. இதனால் உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இவற்றை அறியாத பிரபுக்கள் கொள்கை வகுப்பவர்களாக இருந்தனர். இதற்குப் பதிலாக அவற்றைத் தாமே கையாள வேண்டும் என்ற எண்ணம் வியாபாரிகளிடையே வலுவடைந்து வந்தது.

## தத்துவார்த்தக் கருத்துக்கள்

பிரான்சின் அரசியல், சமூக நிலைகளால் பேதலித்துப் போயிருந்த அனைத்துப் பிரிவினருக்கும் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் சமூக மாற்றத்துக்கான சக்தியையும், தைரியத்தையும் வழங்கின. இவ்வாறான தத்துவார்த்தக் கருத்துக்களை முன்வைத்தோரில் மொண்டெஸ்கியூ, ரூஸோ, வோல்டயர் ஆகிய சிந்தனையாளர்கள் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

பிரான்சிய அறிஞர்களின் கருத்துக்கள் இப்புரட்சியை மூட்டும் தீப்பொறிகளாக அமைந்தன.

## பிரான்சியப் புரட்சிக்கான ஏனைய காரணங்கள்

- பிரான்சியருடைய வெளிநாட்டுப் போர்களால் அதன் திறைசேரி காலியாகக் கிடந்தது. இதனால் பொருளாதார அழுத்தங்கள் அவர்களைக் கடுமையாகப் பாதித்தன.
- அமெரிக்க சுதந்திரப் போராட்டம்.
- 1688 இல் ஏற்பட்ட ஆங்கிலப் புரட்சியும் அமெரிக்க சுதந்திரப் போரின் தாக்கமும் அவர்களை ஆட்கொண்டிருந்தன.
- 1787ஆம் ஆண்டு ஏற்பட்ட வரட்சியும், 1788ஆம் ஆண்டு ஏற்பட்ட, வெள்ளமும் புரட்சிக்கான காரணங்களுள் சிலவாகும்.

## புரட்சியின் ஆரம்பம்

பிரான்ஸ் எங்கும் அமைதியின்மை மேலோங்கிச்சென்றது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 16ம் லூயி மன்னனால் ஸ்டேட் ஜெனரல் எனும் பாராளுமன்றம் கூட்டப்பட்டது. நீண்ட காலமாகக் கூட்டப்படாத இச்சபையின் சட்ட திட்டங்கள் சம்பிரதாயங்கள் பற்றி அறியாதவர்கள் பெரும் குளறுபடிகளுக்கு முகங் கொடுத்தனர். பிரபுக்களும், குருமாரும் ஏனையோரை இதிலிருந்து வெளியேற்றினர்.வெளியேற்றப்பட்ட மத்தியதர வர்க்கத்தினரான அவர்கள் அருகே இருந்த டெனிஸ் மைதானத்தில் ஒன்று கூடி பிரான்சுக்கு புதிய யாப்பொன்றை அமைக்காமல் கலைவதில்லையென **"டெனிஸ் கோட்"** சத்தியப்பிரமானத்தைச் செய்து கொண்டனர்.

இவற்றால் குழப்பமடைந்த விவசாயிகளும், தொழிலாளர்களும் 1789 -07 - 14ம் திகதி **"பஸ்டீல்"** சிறைச்சாலையைத் தகர்த்ததுடன் புரட்சி மூண்டது.

புரட்சியின் மத்தியில் மன்னனும் மகாராணியும் நாட்டை விட்டுத் தப்பியோடிக் கொண்டிருந்த போது புரட்சியாளர்களின் கைகளில் சிக்கி மரண தண்டனை பெற்றனர். இதனைத் தொடர்ந்து நாளாந்தம் நூற்றுக்கணக்கான பிரபுக்கள் கிளட்டின் எனும் கழுத்துத் துண்டிக்கும் கருவிக்கு இரையாக்கப்பட்டனர்.



பஸ்டீல் தகர்க்கப்படல்.



கிளட்டின் கருவி



ஸ்டேட் ஜெனரல் சபைக் கூட்டம்

புரட்சியாளர்கள் பிரான்சிற்கு அரசியல் யாப்பு ஒன்றை எழுதி வழங்கியதோடு மனித உரிமைகள் பிரகடனம் ஒன்றையும் தயாரித்து வெளியிட்டனர். பிரான்சிய அறிஞர்களின் கருத்துக்களைத் தம்முள் கொண்ட இப்பிரகடனம் இன்றும் உலக நாடுகளில் முன்மாதிரியாகக் கொண்டு பயன்படுத்தப்பட்டுவருகிறது.

## பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்

- சக்தி வாய்ந்த முறையான அமைப்புடனான மத்திய அரசாங்கம் ஒன்றமைக்கப்பட்டமை.
- 1791ம் ஆண்டு உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது.
- ரூசோவின் கொள்கைகள் அடங்கிய இந்தப் பிரகடனத்தில் மனித உரிமைகள் தொடர்பான ஆங்கில, அமெரிக்கர்களின் கருத்துக்களின் தாக்கமும் இருந்தது.

- இந்தப் பிரகடனத்தின் படி இன்று உலகில் பல நாடுகளின் அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது உலகை மேலும் வளப்படுத்துவதற்கும் உதவியாக உள்ளது.
- கி.பி 1791ல் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பிரகடனத்தின் உள்ளடக்கம் வருமாறு

    - அனைத்து மனிதர்களும் சுதந்திரப் பிரஜைகளாகப் பிறப்பதனால் அவர்கள் அனைவரும் சமமான உரிமைகளை உடையோராவர்.
    - சட்டத்தை இயற்றுவதில் பங்குபெறும் உரிமை. ஒவ்வொரு குடிமக்களுக்கும் உரியதாகும்.
    - சட்டத்திற்குப் புறம்பாக ஒருவரைக் கைது செய்யவோ, சிறைப்படுத்தவோ கூடாது.
    - ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்கும் உரிமை இருக்க வேண்டும்.
    - தான் விரும்பும் சமயத்தைப் பின்பற்றும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

- மக்களின் வருமான மட்டத்திற்கு ஏற்ப வரி செலுத்தும் முறை வந்தமை
- நிலமானியமுறை வீழ்ச்சியடைந்து சுதந்திரமான முதலாளித்துவப் பொருளாதார முறை ஏற்பட்டமை.
- திறமைக்கு உரிய இடம் கிடைத்தமை.
- நில உடைமையுள்ள சிறு விவசாய வர்க்கம் ஒன்று உருவானமை.

பிரான்சியப் புரட்சியின் விளைவுகளின் படி மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கு அம்மக்கள் புரிந்த தியாகம் அவர்களுக்கு மட்டுமன்றி, உலக மக்கள் அனைவருக்குமே இன்றும் நன்மை பயக்கின்றது.

**செயற்பாடு**

1. பலவீனமான தலைமைத்துவத்தினால் நாடு வீழ்ச்சியடையும் என்பதை 16ஆம் லூயி மன்னனின் வாழ்விலிருந்து தெளிவுபடுத்துக.
2. பிரான்சியப் புரட்சிக்குப் பங்களிப்புச் செய்த அந்நாட்டு தத்துவஞானிகள் மூவரின் பெயர்களைத் தருக.
3. மனித உரிமைகள் பிரகடனத்தின் படி சிறந்த ஆட்சியாளன் ஒருவனிடம் காணப்பட வேண்டிய பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

# கைத்தொழிற் புரட்சி

மனிதன் கைகளினால் செய்த வேலைகளுக்குக் கருவிகளைக் கண்டறிந்ததும் மனித மிருக சக்திக்குப் பதிலாக வலு மூலங்களைக் கண்டறிந்ததுமே கைத்தொழில் புரட்சியாகும். இதனால் கைத்தொழிற்றுறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு குடிசை கைத்தொழில்கள் பாரிய ஆலைத் தொழில்களாக மாறி சந்தைகளை நோக்கிய பேரளவிலான உற்பத்திகளை மேற்கொள்வதற்கு வழிவகைகள் ஏற்பட்டன.

18ம் நூற்றாண்டின் மத்தியகாலப் பகுதியில் ஐரோப்பிய நாடுகள் உலகெங்கிலும் குடியேற்றங்களைக் கொண்டிருந்தன. இதனால் பரந்த சந்தைகள் கிடைக்கப் பெற்றமையும், சனத்தொகை பெருகிச் சென்றமையும் வியாபார சமூகம் விருத்தியடைந்தமையும் உற்பத்தித்துறையில் பாரிய மாற்றங்களை வேண்டி நின்றன. இந்நிலையில் கைத்தொழிற் புரட்சி முதலில் இடம்பெற்றது பிரித்தானிய நாட்டிலாகும்.

**பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்கள்**

- **மூலப்பொருள் :**
  மூலப்பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தமை, இரும்பும் நிலக்கரியும் அங்கு காணப்பட்டதோடு அதன் குடியேற்றங்களிலிருந்தும் மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.

- **அரசியல் உறுதி :**
  1688ல் ஏற்பட்ட ஆங்கிலப் புரட்சியைத் தொடர்ந்து பிரித்தானியாவில் உறுதியான ஆட்சி நிலவியது. ஆனால் ஐரோப்பாவில் ஏனைய நாடுகளில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன.

- **குடித்தொகைப் பெருக்கம் :**
  18ஆம் நூற்றாண்டாகும் போது பிரித்தானியா உள்நாட்டு,வெளிநாட்டுப் போர்களிலிருந்து விடுபட்டமையால் சனத்தொகை பெருக்கமுற்றது. இவர்களின் அதிகரித்த நுகர்வால் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவை ஏற்பட்டமை.

- **இலாபகரமான உழைப்பு :**
  பிரித்தானியாவில் சனத்தொகைப் பெருக்கத்தைத் தொடர்ந்து உணவுத் தேவையை நிறைவு செய்ய பேரளவு பண்ணைகள் உருவாயின. இதற்காக சிறு விவசாயிகளின் நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டன. இதனால் நிலமிழந்த சிறு விவசாயிகள் தொழில் நாடி நகரங்களை நோக்கி வந்தமையால் மலிவான கூலிக்குத் தொழிலாளரைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

✸ **வர்த்தக விருத்தி :**
பிரித்தானியாவில் உள்நாட்டு, வெளிநாட்டு போக்குவரத்துக்கான நல்ல வசதிகள் காணப்பட்டமை. தீர்வையற்ற பண்டப் பரிமாற்றம் இடம் பெற்றமை. பரந்த குடியேற்றங்களால் கிடைக்கப்பெற்ற சந்தை வசதி என்பவற்றால் வர்த்தகம் விருத்தியுற்றமை.

✸ **விருத்தியடைந்த வங்கி முறை :**
உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்தால் உழைத்த பெருந் தொகைப் பணத்தைப் பாதுகாத்து வைப்பதற்காக வங்கிகளும், நிதித் தாபனங்களும் தோன்றின. இவை கைத்தொழில் துறைக்கான மூலதனத்தை வழங்கியமை.

இவ்வாறான பல்வேறு காரணங்களால் விருத்தியுற்ற கைத்தொழிற் புரட்சி கீழ்வரும் மூன்று தொழில் துறைகளில் இடம் பெற்றன.

1. நெசவு
2. நிலக்கரி
3. இரும்பு

## நெசவுக் கைத்தொழில்

இத்துறையிலே முதன் முதலாக தொழினுட்பம் பிரயோகிக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் குடிசைக் கைத்தொழிலாகவே காணப்பட்டது. இதில் இரு பிரிவுகள் உள்ளன. நூல் நூற்றல், துணி நெய்தல் என்பனவே அவை. வர்த்தக விருத்தியைத் தொடர்ந்து இவற்றிற்கான கேள்வி அதிகரித்தமையால் உற்பத்தியை அதிகரிக்க வழிவகைகள் கண்டறியப்பட வேண்டி இருந்தது.

❈ 1733இல் ஜோன் கே என்பவரால் நெசவு இயந்திரம் (ஓடும் நாடா) ஒன்று வடிவமைக்கப்பட்டது.

❈ 1767இல் ஜேம்ஸ் - ஆவ் கிரீஸ் என்போரால் நூல் நூற்கும் ஸ்பினிங் ஜெனி எனும் இயந்திரம் கண்டறியப்பட்டது.

❈ றிச்சட் ஆக்ரைட் என்பவரால் கண்டறியப்பட்ட நீர்ச்சட்டத்தால் கைகளினால் கருவியை சுழற்றுவதற்குப் பதிலாக நீரின் உதவியால் அதனை மேற்கொள்ள முடிந்தது.


நூற்கும் இயந்திரம்


நீர்ச்சட்டம்


பாரிய நெசவு இயந்திரம்


- 1779ல் சாமுவேல் குரோம்ரன் கண்டறிந்த மியூல் இயந்திரத்தால் நூல் நூற்றல் மேலும் வேகமடைந்தது. ஜெனி, மியூல் இயந்திரங்களை இயக்க நீர்ச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

- எட்மன்ட் காட்ரைட் என்பவரால் கண்டறியப்பட்ட விசைத் தறியினால் உற்பத்தி பல்கிப் பெருகியது. இவ்வியந்திரத்தால் முன்பு தொழிலாளி ஒருவர் உற்பத்தி செய்த துணியைப் போல் நான்கு மடங்கை ஒரு சிறுவனால் உற்பத்தி செய்ய இயலுமாயிருந்தது. 1785ல் பாரிய நெசவாலை ஒன்று உருவாக்கப்பட்டது.

இன்று பலவிதமான பாரிய இயந்திரங்கள் வரையிலான நெசவுக் கைத்தொழில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இது தொடர்பாக மேலும் புதிய முறைகள் கண்டறியப்பட்டு வருகின்றன. எனவே தொழிற்புரட்சியானது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக அன்றி தொடர்ந்து செயற்பட்டு வரும் ஒன்றாக விளங்குகின்றது.


## இரும்புருக்குத் தொழில்

கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் ஆயுத உற்பத்திக்கே இரும்பு பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இக்காலத்தில் இயந்திர சாதனங்களின் உற்பத்திக்காக இரும்பு பெருமளவு தேவைப்பட்டது.



இரும்பை உருக்கும் நவீன இயந்திரம்

- 1730 இல் ஆபிரஹாம் டார்வி என்பவரின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து இரும்புத்தாதை உருக்குவதற்கு விறகுக்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்தக் கூடியதாயிருந்தது.
- 1856இல் பேஸ்மர் இரும்பை உருக்கும் போது உருவாகும் கழிவை அகற்றுவதற்கான முறை ஒன்றை அறிமுகப்படுத்தினார்.
- 1831இல் நீல்சன் என்பவர் கொதி உலையைக் கண்டறிந்ததால் சக்தி வாய்ந்த உலோகமான உருக்கின் உற்பத்தி வளர்ச்சி அடைந்தது.
- 1846இல் சீமன் என்பவர் திறந்த உலையை நிர்மாணித்தார். இவற்றால் அவசரமாகவும், அதிகமாகவும் இரும்பையும் உருக்கையும் உற்பத்தி செய்யக் கூடியதாயிருந்தது.



பேஸ்மரின் உருக்கு உலை

நீண்ட காலப் பாவனையும் துருப் பிடிக்காத தன்மையும் உருக்கிடம் காணப்பட்டமையால் அதன் பாவனை அதிகரித்துச் சென்றது.

இன்று உலக நாடுகள் அனைத்திலும் துருப்பிடிக்காத இரும்புருக்குக் கைத்தொழில் இடம்பெறுகிறது. இயந்திர சாதனங்கள், வாகனங்கள் உற்பத்திக்காகவும், நிர்மாணத் துறைக்காகவும் இதன் தேவை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. இன்று இவற்றுடன் நில்லாது பல்வேறு வகைப்பட்ட தேவைகளுக்காக எத்தனையோ விதமான உலோகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## நிலக்கரிக் கைத்தொழில்

பிரித்தானியா நிலக்கரிச் சுரங்கங்கள் நிறைந்த நாடு. இதனால் வீட்டுப் பாவனைக்கு நிறையவே இதனைப் பயன்படுத்தினர். இரும்புருக்குத் தொழிலின் வளர்ச்சியைத் தொடர்ந்து அதனை உருக்குவதற்காக நிலக்கரியின் தேவையும் வெகுவாக அதிகரித்தது. அப்போது அதனை அதிகமாக அகழும் போது இரு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க நேர்ந்தது.




நிலக்கரிக் கைத்தொழில் பிரதேசம்

1. சுரங்கத்தினுள் ஊற்றெடுக்கும் நீர்
2. சுரங்கத்தினுள் உருவாகும் மாசடைந்த வளி

ஆரம்ப காலத்தில் சுரங்கத்தினுள் தேங்கும் நீர் கைகளினாலேயே இறைக்கப்பட்டது. இதற்காகப் பெருமளவு தொழிலாளர் தேவைப்பட்டனர். மேலும் சுரங்கத்தின் ஆழம் அதிகரித்துச் செல்கையில் அங்கு காணப்படும் வெப்பத்தைத் தணிக்கக் குளிரூட்டப்பட்ட காற்று செலுத்தப்பட வேண்டியுமிருந்தது. இப்பிரச்சினைகள் இரண்டையும் கி.பி 1735 நிவ் கோமான் என்பவர் கண்டறிந்த நீராவியால் இயங்கும் எஞ்சின் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடியதாயிருந்தது. இந்த எஞ்சினை ஜேம்ஸ் வோட் மேலும் விருத்தி செய்து புதுப்பித்தார். இதனால் நிலக்கரி உற்பத்தி பெருகத் தொடங்கியது.

1812இல் ஹம்ப்றி டேவி யால் கண்டுபிடிக்கப்பட்ட பாதுகாப்பான விளக்கால், நிலக்கரிச் சுரங்கத் தொழில் பாதுகாப்புமிக்கதாக மாறியது.



ஜேம்ஸ் வோட்டின் நீராவி இயந்திரம்

சுரங்கத்தினுள் உருவாகும் இலகுவாகத் தீப்பிடிக்கக் கூடிய மீதென் வாயுவினால் அங்கு வெளிச்சத்தை வழங்குவது ஆபத்தான காரியமாக இருந்து வந்தது. இவ்வாபத்தை எதிர்கொள்ளத்தக்கதாக இவ்விளக்கு அமைந்திருந்தது.

நிலக்கரிக் கைத்தொழிலிலிருந்து பல்வேறு உப உற்பத்தித் தொழில்கள் தோற்றம் பெற்றன.

- தார்
- சாய வகைகள்
- மருந்து வகைகள்
- வாசனைப் பொருட்கள்
- எண்ணெய் வகைகள்
- பசளை

இவற்றால் நிலக்கரிக் கைத்தொழில் செழுமையுற்றது. இன்று முக்கியமான ஓர் எரிபொருளாக இது திகழ்கிறது. எரிபொருள் பிரச்சினையால் இத்துறையிலான கண்டுபிடிப்புக்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

**விவசாயத் துறையில் கைத்தொழில் புரட்சியின் பங்களிப்பு**

- விவசாய நடவடிக்கைகளுக்காக பல்வேறு இயந்திர சாதனங்களைக் கையாளல்.
- பேரளவிலான பண்ணைகள்.
- கூடிய விளைச்சலுக்காகப் பயிர்களை மாற்றிப் பயிரிடும் முறை.
- வரிசையாக விதைக்கும் முறை.
- விலங்கு வளர்ப்பில் தொழினுட்பப் பாவனை.



விவசாயப் பண்ணை



விவசாய நடவடிக்கையில் இயந்திரப் பாவனை



வரிசையாகப் பயிரிடல்



விலங்குப் பண்ணை

பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்புத் துறைகளிலும் அன்றிலிருந்து இன்றுவரை எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டு மேலும் வளர்ச்சி பெற்றவண்ணமுள்ளன.

## போக்குவரத்துத் துறையில் கைத்தொழிற் புரட்சி

கைத்தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் பொருட்களைக் காவும் போக்குவரத்துத் துறைக்கும் வியாபித்துள்ளது. போக்குவரத்து சாதனங்களில் மட்டுமன்றி பாதைகளிலும் இதன் செல்வாக்கை அவதானிக்க முடிந்தது. 18ம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் பெருந்தெருக்களும், புகையிரதப் பாதைகளும், கால்வாய்களும் உருவாக்கப்பட்டன.

1811இல் ஜோன் மெகடம் என்பவரால் கற்பாதைகள் உருவாக்கப்பட்டன. பெரிய கற்களைப் பரவி அதனை அழுத்தி செப்பனிட்டு அதன் மீது சிறு கற்களைப் பரவி மீளவும் அழுத்தி செப்பனிடுவதன் மூலம் உறுதியான தெருக்களை அவர் அமைத்தார். இதனால் வாகனப் போக்குவரத்து வேகம் பெற ஆரம்பித்தது. மெகடம் முறையால் இங்கிலாந்திலும் ஸ்கொட்லாந்திலும் பரவலாகப் பாதைகள் அமைக்கப்பட்டன.

நிலத்திலும் நீரிலும் வளர்ச்சியுற்ற போக்குவரத்துத் துறை ஆகாயத்திற்கும் பரவ ஆரம்பித்தது.

- 1807இல் ஜேம்ஸ் வோட்டின் நீராவி எஞ்சினைப் பயன்படுத்தி, அமெரிக்கரான ரொபட் புல்டன் ''கிளேர்மொன்ட்'' எனும் புகைப்படகை முதன் முதலில் ஓடவிட்டார்.

- 1811இல் பிரயாணிகளை ஏற்றிச் செல்லத்தக்க புகைக்கப்பலை ஹென்றி பெல் உருவாக்கினார்.


- 1814இல் ஜோர்ஜ் ஸ்டீவன்ஸன், நீராவியால் இயங்கும் புகையிரதத்தை ஓடவிட்டார்.

- 1885இல் ஜேர்மனியில் டெம்லரால் முதலாவது மோட்டார் வாகனம் கண்டறியப்பட்டது.


- 1903இல் அமெரிக்காவில் ரைட் சகோதரர்களால் விமானம் உருவாக்கப்பட்டது.



டெம்லரின் மோட்டார் வண்டி


ரைட் சகோதரர்களின் விமானம்


நீராவியால் இயங்கும் புகையிரதம்



முன்னேறிய தொழினுட்பத்தால் உருவான மோட்டார் வண்டி

மேற்கூறப்பட்ட விதத்தில் ஆரம்பிக்கப்பட்ட மோட்டார் வாகன, புகையிரத, கப்பல், ஆகாயவிமானப் போக்குவரத்து இன்று பல்வேறு வழிகளில் முன்னேறியுள்ளது. இவைகள் கைத்தொழில் புரட்சியின் விளைவுகளேயாகும். இன்று உலகில் பல நாடுகள் பலவித சுகபோக, உயர்தர வாகனங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

### தொலைத்தொடர்புத் துறையில் கைத்தொழில் புரட்சியின் பங்களிப்பு

* கி.பி.1840இல் நாட்டில் எவ்விடத்திற்கும் ஒரு பென்ஸ் செலவில் கடிதமனுப்பும் சேவை (Penny Post)
* கி.பி.1844இல் அமெரிக்கரான சாமுவேல் மோஸ் தந்திச் சேவையை அறிமுகஞ் செய்தல்
* கி.பி.1876இல் அமெரிக்கரான கிரஹம் பெல் தொலைபேசியைக் கண்டறிதல்
* கி.பி.1895இல் இத்தாலியரான மார்க்கோணி வானொலியை உலகிற்கு அறிமுகம் செய்தல்
* கி.பி.1940இல் ஜோன் லொகி பெயார்ட் தொலைக்காட்சியைக் கண்டறிதல்

இவ்வாறு ஆரம்பமான தொலைத் தொடர்பு இன்று கையடக்க தொலைபேசி மூலம் பல்வேறு செயல்களைச் செய்யக்கூடிய அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த முன்னேற்றம் மேலும் தொடர்கிறது. கைத்தொழில் மயமாதல் இன்று போட்டியாக மாறியுள்ளது. இதன் விளைவாகப் பல புதிய தொலைத்தொடர்பு சாதனங்கள் உருவாகி வருவதை நாம் காணக்கூடியதாய் உள்ளது. உலகை சிறு அறைக்குள் உள்ளடக்கக்கூடிய விதத்தில் இன்று தொலைத் தொடர்பு முன்னேறி வருகிறது.



கிரஹம் பெல்லினது தொலைபேசியும் கையடக்கத் தொலைபேசியும்

## கைத்தொழில் புரட்சியின் பரம்பல்

18ம் நூற்றாண்டில் பெரிய பிரித்தானியாவில் ஆரம்பமான கைத்தொழில் புரட்சி 19ம் நூற்றாண்டின் மத்தியை அடையும் போது உலகத்தின் பெரும்பாலான நாடுகளுக்குப் பரவி 20ம் நூற்றாண்டில் உலகையே ஆட்கொண்டு 21ம் நூற்றாண்டில் உலகெங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

உலகை ஆட்டிப் படைக்கும் கைத்தொழில் வல்லரசுகள் எனக் குறிப்பிடப்படும் G 7 எனும் குழுவில் உள்ள நாடுகளாவன :

ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, ஜப்பான் இவற்றோடு ரஷ்யா, சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற பெரிய நாடுகளும் சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர், தாய்வான், இஸ்ரவேல், தென்கொரியா போன்ற சிறிய நாடுகளும் கைத்தொழில் துறையில் அபார வளர்ச்சி கண்டுள்ளன.

## கைத்தொழில் புரட்சியின் பலாபலன்கள்

எந்தவொரு விடயத்திற்கும் நல்லதொரு பக்கம் இருப்பது போல தீமையான பக்கம் ஒன்றிருப்பது தவிர்க்க முடியாத விதிபோல் உள்ளது. அதற்குக் கைத்தொழில் புரட்சியும் விதிவிலக்கல்ல.

நன்மைகள்:

- ❋ மனித சிரமத்தை இயந்திரங்கள் குறைத்துள்ளமை.
- ❋ பாரிய தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றமை
- ❋ பேரளவில் உற்பத்தி இடம் பெறுகின்றமை
- ❋ நாடுகளுக்கிடையே சர்வதேச வர்த்தகம் விருத்தி அடைந்துள்ளமை.
- ❋ பிரயாணங்கள் செய்வதற்கான வசதி
- ❋ சம்பளம் பெறும் தொழிலாள வர்க்கம் உருவாகியுள்ளமை
- ❋ முயற்சியாளர்களைக் கொண்ட பெரும் முதலாளி வர்க்கம் தோற்றம் பெற்றமை.
- ❋ வங்கிகள், நிதி நிறுவனங்கள ̇ காப்புறுதித் தாபனங்களின் வளர்ச்சி

தீமைகள்:

- ❋ குடிசைக் கைத்தொழில் அழிவுற்றமை
- ❋ கிராம மக்கள் நகரங்களுக்கு வந்தமையால் நகரங்களின் சனத்தொகை அதிகரித்தமை.
- ❋ தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் குறைவுற்றமை, (நீண்ட நேர வேலை, குறைந்த ஊதியம், ஏழ்மை சேரி வீடுகள்)
- ❋ கைத்தொழில் நாடுகள் குடியேற்ற நாடுகளைப் பெறமுயன்றமை உலக யுத்தம் ஏற்படவும் காரணமானமை.
- ❋ தொழிற்சாலைகளால் சூழல் மாசுறுதல்.



சேரிப்புறங்கள்



சூழல் மாசுறல்

**செயற்பாடு**

1. கைத்தொழில் புரட்சி முடிவின்றித் தொடரும் ஒன்றாகும். மனித வாழ்வை இலகுபடுத்துவதற்காகப் பல உற்பத்திகள் இதனால் தோன்றின. தற்காலத்தில் அவ்வாறு தோன்றிய உற்பத்தி தொடர்பான படங்களை சேகரித்து சிறு கைநூல் ஒன்றைத் தயாரிக்குக.
2. கைத்தொழில் புரட்சி மனிதனுக்கு நன்மை விளைவிக்கும், தீமை விளைவிக்கும் என்ற தலைப்பில் வகுப்பில் விவாதம் ஒன்றை நடாத்துக.
3. கைத்தொழில் புரட்சி தொடர்பான புதிய கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| நெசவு | இரும்புருக்கு | நிலக்கரி | விவசாயம் | போக்குவரத்தும் தொடர்பாடலும் |
|---|---|---|---|---|
| | | | | |

**சாராம்சம்**

- 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் பாதையை மாற்றியமைப்பதில் ஆங்கிலப் புரட்சி, அமெரிக்க சுதந்திரப் போர், பிரான்சியப் புரட்சி என்பன காரணங்களாயின.
- இங்கிலாந்தில் ஏற்பட்ட ஆங்கிலப் புரட்சி, அமெரிக்க சுதந்திரப் போருக்கும், பிரான்சியப் புரட்சிக்கும் வழியாக அமைந்தது.
- இந்த புரட்சிகளின் மூலம் அரசனின் சர்வாதிகார ஆட்சி முறை வீழ்ச்சியடைந்து, ஜனநாயக அரசியல் முறை உருவானது.
- பாராளுமன்ற ஆட்சிமுறை, கூட்டாட்சி போன்ற அரசியல் முறைகளும் மானிடவாதம் போன்ற தத்துவம் என்பன ஐரோப்பிய நாடுகளில் உதயமாகி, உலகின் ஏனைய நாடுகளுக்கும் பரவியது.
- கைகளால் செய்யப்பட்ட வேலைகளை இயந்திரங்கள் செய்தமையால் மனிதனின் வேலைகள் சுலபமானது. இது மேலும் இலகுவாகும் பொருட்டுக் கைத்தொழில் புரட்சி தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வாறே பிரித்தானியாவில் ஆரம்பமான கைத்தொழில் புரட்சி, இன்று உலகில் பல நாடுகளிலும் பரவியுள்ளது. மனிதனின் நன்மைக்காக ஆரம்பமான கைத்தொழில் புரட்சி இன்று மனிதனுக்குத் தீமையாக அமைந்த சந்தர்ப்பங்களும் உண்டு.